# உலக சமாதானம் - சாத்தியமா?

மக்கள் நெடுங்காலமாக உலக சமாதானத்திற்காக முயன்று கொண்டிருக்கிறார்கள், தேசங்களிடையே சமாதானம் ஏற்பட விரும்புகிறார்கள், ஆனால் அது நடக்க முடியாத ஒன்றாகவே இருக்கிறது.

உலக நாடுகளின் ஆயுதப் போட்டியும், பேரழிவை ஏற்படுத்தும் அணு ஆயுதங்களும், ரசாயன ஆயுதங்களும் குவிக்கப்பட்டு வருவது மனிதகுலத்துக்கு பெரிய ஆபத்தை கொண்டு வந்திருக்கிறது.

இப்படிப்பட்ட யுத்த தளவாடங்கள் செய்து குவிப்பது வேதாகம தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றியுள்ளது:

" இதைப் புறஜாதிகளுக்குள்ளே கூறுங்கள்; யுத்தத்துக்கு ஆயத்தம்பண்ணுங்கள், பராக்கிரமசாலிகளை எழுப்புங்கள்; யுத்தவீரர் எல்லாரும் சேர்ந்து ஏறிவரக்கடவர்கள். உங்கள் மண்வெட்டிகளைப் பட்டயங்களாகவும், உங்கள் அரிவாள்களை ஈட்டிகளாகவும் அடியுங்கள்; பலவீனனும் தன்னைப் பலவான் என்று சொல்வானாக. - **யோவேல் 3: 9, 10**

உலக யுத்தங்களில் பல தேசங்கள் விவசாய மற்றும் வேறு துறை தொழிற்சாலைகளை யுத்தத்திற்கு ஆயுதம் தயாரிக்கும் தொழிற்சாலைகளாக மாற்றின. அன்று முதல் இன்று வரை தேசங்கள் ஆக்கபூர்வ துறைகளில் செலவழிக்க வேண்டிய பணத்தை கொட்டி நவீன போர்த்தளவாடங்களை செய்து குவித்துக் கொண்டிருக்கின்றனர்.

பேரழிவு ஆயுதங்களை குறைக்க வேண்டும், தயாரிப்பதை நிறுத்த வேண்டும் என்ற எண்ணம் உலகம் முழுவதும் இருந்தாலும் போட்டி நாடுகள் மற்ற நாடுகளின் மீது ஆயுதச் சோதனையை முழுவதுமாக நடத்துவது முடியாத ஒன்றாகவே இருக்கிறது. ஏனென்றால் சில நாடுகள் ரகசியமாக ஆயுதங்களை தயாரிக்க கூடும் என்பதை போட்டி நாடுகள் நன்கு அறியும்.

ஆயுதக் குவிப்பை குறைப்பதற்கு வல்லரசு நாடுகள் தங்களுக்குள் பேச்சுவார்த்தைகள் நடத்தினாலும் முழுமையாக இவை நடைபெற முடியாததாகவே இருக்கிறது. ஆயுதக் குறைப்பு மற்றும் தேசங்களிடையே முழுமையான சமாதானம் என்பவை அடைய முடியாததாகவே இருக்கிறது.

இந்த உலக அமைப்பில் சில நல்ல விசயங்கள் இருந்தாலும், வேதாகமத்தின்படி தற்கால உலக அமைப்பு " தற்போதைய தீய உலகம்" என அழைக்கப்படுகிறது. சாத்தான் " இந்த உலகத்தின் தேவன் என அழைக்கப்படுகிறான். ( கலாத்தியர் 1:4; யோவான் 14:30; 2 கொரிந்தியர் 4:4 )

இதனால் சாத்தானையும் அவன் ராஜ்யத்தையும் தூக்கி எறிய கடவுளுக்கு வல்லமை இல்லை என்று அர்த்தம் கொள்ள கூடாது. அவர் தீமையை அனுமதிப்பதின் மூலம் காரியங்களை தனது திட்டத்தின் படி செயல்படுத்த குறிப்பிட்ட அளவு விட்டு வைத்திருக்கிறார். இதனால் தீமையின் அனுபவங்களையும் பல பயனுள்ள பாடங்களையும் எல்லோரும் கற்றுக் கொள்ள, குறிப்பாக அவருடைய பிள்ளைகள் கற்றுக் கொள்ளவுமே அதை அனுமதித்திருக்கிறார்.

கடவுள் தீமையை அனுமதித்தன் நோக்கம் பெரும்பாலும் நிறைவேறிவிட்டது. ஆகவே சாத்தான் மற்றும் விழுந்துபோன தூதர்களின் தற்போதைய தீய ராஜ்யத்தை அழிக்கும் வேளை வந்துவிட்டது.

**1914**ம் ஆண்டு முதல் முன்னெப்போதும் இல்லாத அளவு மகா இக்கட்டுக் காலத்தை ஆரம்பித்து சாத்தானின் தீய ஆளுகையை கடவுள் முடிவுக்குக் கொண்டு வருகிறார். (தானி **12:1**) இந்த ஆபத்துக் காலமே முடிவுக்காலம் என்றழைக்கப்படுகிறது. தானி 12:4

கடவுளின் உண்மையான சபைக்கு அடையாளமான எலியா தீர்க்கதரிசி பயங்கர அழிவை ஏற்படுத்தும் பெரும் காற்று, பின்பு பூமியதிர்ச்சி இறுதியாக அக்னி ஆகியவற்றை தரிசனத்தில் கண்டது, சபை வகுப்பார் சாத்தானின் ராஜ்யத்தை அழிக்கும் பயங்கர யுத்தங்கள், புரட்சிகள், மற்றும் அராஜகங்களை காண்பதை அர்த்தப்படுத்துகிறது. இந்த அழிவுகள் மனுக்குலத்தை தளர்வடையச் செய்து மனமேட்டிமையை தகர்த்து கடவுளின் சமாதானத்தை அறிவிக்கும் மெல்லிய சத்தத்தை கேட்கும்படி செய்கிறது. ( 1ராஜாக்கள் 19:11,12 )

ஆபத்துக் காலத்துக்கு பின்பான காட்சியை சங்கீதக்காரன் தீர்க்கதரிசனமாக விவரிப்பது: “அவர் பூமியின் கடைமுனைமட்டும் யுத்தங்களை ஓயப்பண்ணுகிறார்; வில்லை ஒடித்து, ஈட்டியை முறிக்கிறார்; இரதங்களை நெருப்பினால் சுட்டெரிக்கிறார். நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்; ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன்.” -சங்கீதம் **46:8-10**

1914ம் ஆண்டிலிருந்து இரண்டு பகுதிகளாக உலக மகா யுத்தம் நடத்திருக்கிறது, உலகம் முழுவதும் புரட்சிகளும் அராஜகங்களும் நடந்து வருகிறது. இந்த மகா இக்கட்டுக் காலத்தில் இன்னும் இவை அதிகரிக்கப் போகின்றன. கடவுள் இவற்றை கட்டுப்படுத்தாவிடில் முழு உலகமும் அழிவைச் சந்திக்கும். ஆனால் கிறிஸ்துவும் அவருடைய சபை வகுப்பாரும் தலையிட்டு இவற்றை முடிவுக்கு கொண்டு வருவார்கள். ( மத் 24:21, 22; செப்பனியா 2:3; 3:8,9 )

தற்போதைய தீய உலக அமைப்பு மற்றும் அதன் போலி மத அமைப்பும் (வானங்கள்) சமுதாய அமைப்பும் (பூமி) “கிறிஸ்துவின் நாளின்” கொந்தளிப்பில் (“அக்னி”) முழுவதுமாக அழிக்கப்படும். அவற்றிற்கு பதிலாக கிறிஸ்துவும் சபையும் சேர்ந்த மத அமைப்பு (“புதிய வானங்கள்”) அவர்களின் புதிய சமுதாய ஒழுங்கும் (“புதிய பூமி”) அமைக்கப்படும். நீதீமான்கள் அங்கு வாசமாயிருப்பார்கள். 2பேதுரு 3:7:13 ஏசாயா 25: 6-9; 35; 65:17-25; தானியேல் 2

எபிரெயர் 12: 26-28லும் இந்த உபத்திரவ காலம் வானத்தையும் பூமியையும் உலுக்கும் பூமியதிர்ச்சியாக விவரிக்கப் பட்டுள்ளது. தேவனுடைய நீதியிலும் சத்தியத்திலும் அஸ்திபாரம்

போடப்படாதவைகள் எல்லாம் இந்த பூமியதிர்ச்சியில் நொருங்கி விடும். கிறிஸ்துவின் ராஜ்யத்தின் காரியங்களில் கட்டப்பட்டவைகள் மட்டுமே நிலைத்து நிற்கும். அப்படிப்பட்ட ஒரு ஒரு நீதியான ராஜ்ஜியம் இந்த உலகில் வரும். சகல ஜாதிகளையும் அசையப்பண்ணுவேன், சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார் - ஆகாய் 2: 6, 7; ரோமர் 8: 19-22

சமாதான பிரபுவாகிய கிறிஸ்து யேசு, புதிய நீதியான அரசாங்கத்தை ஏற்படுத்துவார். உலக மக்கள் எல்லோரும் அந்த அரசின் கீழ் வந்து தங்களது யுத்த ஆயுதங்களை விவசாய கருவிகளாக மாற்றுவார்கள்.

"திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்து கொள்வார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை. ஏசாயா 2:2-4 ; 9:6,7; சங்கீதம் 22:27-29; 72; 86:9; மீகா 4:1-4

இதுவே மக்களின் நீண்ட நாள் கனவாகிய நிலையான அமைதி தவழும் உலகம்.

உலகை ஆளும் கிறிஸ்து ராஜா உலக தேசங்களுக்கு மட்டுமல்ல, கடவுளிடமும் தம்மிடமும் நம்பிக்கை வைப்போர்களுக்கும் சமாதானத்தை கொடுக்கிறார்.

நாம் நமது வாழ்க்கையை கடவுளுக்கு அர்ப்பணித்தால், பிரதிஷ்டை செய்தால் (நீதி 23:26; மத் 16:24; ரோமர் 12:1 ) நமது மனதிலும் இருதயத்திலும் ஆழ்ந்த சமாதானத்தை அனுபவிப்போம். எல்லா மனிதர்களின் புரிதல்களையும் தாண்டிய தேவனுடைய சமாதானம், கிறிஸ்துவின் மூலம் இந்த கலக்கம் நிறைந்த உலகில் எல்லா பயங்களில் இருந்தும் நம்மை விடுதலையாக்கும்.

சங்கீதம் 119:165; ஏசாயா 26:3,4; யோவான் 14:27; பிலி 4:6,7; கொலே 3:15

**2Pe 3:12,13** தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்; அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம். அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்.